திருக்கோவில் பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 06 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து திருக்கோவில் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) சபையின் மூன்று நிலையான வைப்புக்கள் மீதான மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 500,143 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்காததினால் ஆண்டிற்கான மிகை அதே தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பிரேத ஊர்தி கொள்வனவு தொடர்பில் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 445,194 நிலுவைத் தொகையானது கடன் மூலதனமாகவும் திரண்ட நிதியிலும் கணக்கீடு செய்திருந்தமையினால் திரண்ட நிதி அதே தொகையினால் மிகையாகவும் ஐந்தொகையானது அதே தொகையினால் சமப்படாமலும் காட்டப்பட்டிருந்தது.

(இ) பிரேத ஊர்தி கொள்வனவு தொடர்பில் 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 685,856 தொகையானது காசுக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அடையாளங் காணப்படாத நேரடி வைப்பாகக் காட்டப்பட்டமையினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதி அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) சபையின் பொது வங்கிக் கணக்கிற்கு நேரடிவைப்புக்களாக 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரை இடப்பட்டிருந்த ரூபா 4,558,289 மொத்தத் தொகைகயினை அடையாளம் கண்டு வருமானத்திற்கு எடுக்கப்படாது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அடையாளங் காணப்படாத நேரடி வைப்பாக காட்டப்பட்டமையினால் திரண்ட நிதி மற்றும் காசு மீதி என்பன அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(உ) ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 5,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டு மீளாய்வாண்டில் சபையினால் கையேற்கப்பட்டிருந்த விநாயகபுரம் பொதுச் சந்தைக்கட்டிடம் கணக்குகளிற்கு கொண்டுவரப்படாமையினால் திரண்ட நிதி மற்றும் நிலையான சொத்து என்பன அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டில் சபை நிதி மூலம் ரூபா 881,679 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடமானது நிலையான சொத்தாக காட்டப்படாமையினால் திரண்ட நிதி மற்றும் நிலையான சொத்து என்பன அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டில் நிலையான சொத்தாக ரூபா 11,855,587 தொகை சேர்க்கப்பட்டிருந்தும் மூலதன செலவீட்டிற்கான அரச உதவு தொகையாக ரூபா 6,318,078 திரண்ட நிதியில் சேர்கப்பட்டிருந்ததினால் திரண்ட நிதி ரூபா 5,537,509 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் ஐந்தொகையானது அதே தொகையினால் சமப்படாமலும் காணப்பட்டன.

(ஏ) 2016 ஆம் ஆண்டில் நிலையான சொத்தாக ரூபா 17,313,568 தொகை சேர்க்கப்பட்டிருந்தும் மூலதன செலவீட்டிற்கான அரச உதவு தொகையாக ரூபா 19,431,255 திரண்ட நிதியில் சேர்கப்பட்டிருந்ததினால் திரண்ட நிதி ரூபா 2,117,686 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் ஐந்தொகையானது அதே தொகையினால் சமப்படாமலும் காணப்பட்டன.

(ஐ) 2016 ஆம் ஆண்டு வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கையின் பிரகாரம் 74 வகையான அலுவலக தளபாடங்கள் மீளாய்வாண்டில் ஏலவிற்பனை மூலம் ரூபா 227,950 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் இப் பொருட்களின் கிரயம் மதிப்பிடப்பட்டு கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டி ருக்கவில்லை.

(ஒ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியினர் கடன் நிலுவை ரூபா 4,858,582 தொகை காணப்பட்டபோதிலும், 2017 சனவரி 01 இல் இம்மீதி முன்கொண்டு வரப்பட்டபோது ரூபா 4,497,984 ஆகக் காட்டப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் இக்கடன் நிலுவை ரூபா 360,598 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த அரசிறை கடனாளிகள் ரூபா 2,577,194 தொகையில் ரூபா 862,097 தொகையான நிலுவைகள் 06 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை ஜனநாயகக் சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் 571 | 1,711,438 | இரண்டு தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான 32 மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 600,000 | ஆறு கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,005,795 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,800,750 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,794,954 பின்னடைவொன்றினை காட்டுகின்றது. ரூபா 4,208,436 தொகையால் பற்றாணை மற்றும் குற்றப்பண வருமானம் குறைவடைந்தமை இந்த பின்னடைவுக்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகளும் வரிகளும் | 40,000 | 5,648 | 5,648 | 7,222 | 30,000 | 1,000 | 1,000 | 7,222 |
| வாடகை | 3,295,000 | 3,378,113 | 3,213,038 | 2,552,018 | 3,155,000 | 2,676,576 | 2,344,001 | 2,386,943 |
| உரிமைக் கட்டணம் | 687,500 | 586,000 | 586,000 | 17,955 | 665,000 | 108,500 | 113,570 | 17,955 |
| ஏனைய வருமானம் | 6,405,000 | 2,343,391 | 2,343,391 | - | 7,001,000 | 2,324,367 | 2,324,367 | - |

#### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 8,725,272 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 6,148,077 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 70% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 449 வர்த்தக நிலையங்கள் மற்றும் 8,753 வீடுகள் மீது வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 4,700,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

2.2.4 வாடகை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடை, மீன் சந்தை மற்றும் பொதுச் சந்தை குத்தகை நிலுவை ரூபா 1,624,003 தொகையில் ரூபா 801,371 நிலுவைத் தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வாடகை வருமான நிலுவை ரூபா 928,015 தொகையில் ரூபா 736,135 தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

2.2.5 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுக்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளைச் சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 42 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிட முடியாததனால் சபை வருடாந்தம் ரூபா 150,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 6 வாகனங்கள் மற்றும் 03 இழுவைப் பெட்டிகள் 2 முதல் 12 ஆண்டுகள் வரையான கால வீச்சில் பயன்படுத்தப்பட்ட போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்தியமைத்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட சபைக்கு சொந்தமான 03 உழவு இயந்திரம், 03 கல் அமுக்கி இயந்திரம் மற்றும் பவுசர் என்பவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கு 04 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுத்திருக்காமையால் அவை பயன்படுத்தமுடியாத நிலைக்கு மாறியுள்ளது.

(இ) எந்த நோக்கத்திற்காக முற்பணங்கள் வழங்கப்பட்டதோ அந்நோக்கம் பூர்த்திசெய்யப்பட்டதும் உடனடியாக தீர்த்து வைக்கப்படவேண்டிய போதிலும் முன்னாள் சபை தவிசாளர், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,475,168 தொகையான 4 முற்பணங்களை 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுச் செயற்றிறனின்மை
-----------------------------------------------------------
பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 5,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டு மீளாய்வாண்டில் சபையினால் கையேற்கப்பட்டிருந்த விநாயகபுரம் பொதுச் சந்தைக்கட்டிடமானது பொதுமக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் கட்டப்பட்டமையினால் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பபடுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 76,303 செலவில் தம்பட்டை நூலகமானது திருத்தியமைக்கப்பட்டு ரூபா 144,930 பெறுமதியான தளபாடங்கள் இந்நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் குறித்த தளபாடங்கள் நூலகத்தில் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை இடப்படாது பிரதான நூலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டும் குறித்த நூலகமானது பயன்படுத்தப்படாமலும் காணப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பேருந்து நிறுத்துமிட நிர்மாண வேலையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியினை பெறாமல் ரூபா 167,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு ரூபா 76,165 செலவு செய்யப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டமையினால் இக்குறித்த வேலையானது நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 101,532 செலவில் சேதனப்பசளை அரைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டிருந்தது. மேலும் சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தின் உற்பத்தியினை சந்தைப்படுத்தும் நிலையமானது பொதுமக்கள் நடமாட்டமற்ற இடத்தில் அமையப் பெற்றுள்ளதினால் பொதுமக்களினால் சேதனப்பசளையினை கொள்வனவு செய்ய கணிசமான தூரம் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

(உ) தம்பிலுவில் மத்திய சந்தையின் மாடிக் கடையறையின் 12 கடையறைகளில் 10 கடையறைகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக பாவனையற்றுக் காணப்படுகின்றது. இதனைப் பயன்படுத்துவது தொடர்பில் சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்து பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) பேரேடுகள் பேணுதல் | வாக்குப்பண பேரேடு மற்றும் காசுப் புத்தகம் என்பன நாளதுவரையாகப் பேணப்படுதல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல். |